## CHAPTER – 33

# பழந்தமிழரின் மருத்துவக் கலை பயில் நுட்பம்

**முனைவர் ஜெ.செந்தில்குமார்**
வரலாற்றுத் துறைத்தலைவர் (பொறுப்பு),
பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, பெரம்பலூர்.

**முன்னுரை**

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது தமிழரின் பட்டறிவால் உருவான பழமொழியாகும். நோய்களைப் பற்றியும், நோய் தீர்க்கும் முறைகள் பற்றியும் தமிழர் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நன்குணர்ந்திருந்தனர் என்பதற்கு இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன. இவற்றின் துணை கொண்டு தமிழ்நாட்டு மருத்துவக் கலைநுட்பம் பற்றி ஓரளவு அறிய முடியும். சங்க காலத்தில் மருத்துவ அறிஞர் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் சிலர் சிறந்த இலக்கியச் செல்வராயும் திகழ்ந்தனர் என்பதற்கு ‘மருத்துவன் தாமோதரனார்’ என்னும் புலவரே சான்றாவார். புலவராய்த் திகழ்ந்தமையால் இன்று அவர் பெயர் மட்டும் அறியப்படுகின்றது. அன்று தமிழகம் முழுவதும் எண்ணற்ற மருத்துவர்கள் இருந்திருக்க வேண்டும். பசியையும், நீர் வேட்கையையும் கூடத் தமிழர் நோய் என்றனர். கோவூர் கிழார் நீரையும் உணவையும் ‘இருமருந்து’ எனப் பாராட்டுவார். பசிப் பிணியைப் போக்க முன் வந்த வள்ளல்கள் பசிப்பிணி மருத்துவர் என்று பாராட்டப்பட்டனர். சோழன் நலங்கிள்ளி என்னும் மாமன்னன் தன்னாட்டு வள்ளற் பெருமகன் பண்ணனைப் பாராட்டும் வகையில், “பசிப்பிணி மருத்துவனில்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே”எனப் பாணன் கூற்றில் வைத்துப் பேசுகின்றான். மருத்துவ துறையின் தலைவராகச் சிவபெருமானே கொள்ளப்படுகிறார். அவரே ஏழுலட்சம் பாடல் கொண்ட நூலை இயற்றியதாகக் கொள்வர். நந்தி, சனகர், சனாதர், சனானந்தர், சனற்குமாரர் திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர், கருவூரார் போன்றவர்கள் பல மருத்துவ நூல்களை இயற்றினர் என்று கூறுவர்.

உறுதியான உடம்பில்தான் ஆன்மா செவ்வணம் உறையும் என்பது நம் பெரியவர்கள் கொள்கையாகும். எனவே உடம்பினைச் செம்மையாகப் போற்றுதல் பற்றி வற்புறுத்தியுள்ளனர்.

> **“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
> **திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார் உடம்பை வளர்க்கும் உபாய**
> **மறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே”.**

என்று திருமூலர் கூறுதலை காணலாம். மேற்கூறியவற்றைப் போல பழந்தமிழர்களின் மருத்துவகலை நுட்பம் எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி விவரிப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**அறுவை மருத்துவம்**

மனிதன் அறிந்திருந்த பழமையான மருத்துவ முறைகளில் அறுவை மருத்துவமும் ஒன்று கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் அறுவை மருத்துவ முறைகள் முன்னேற்றமான நிலையில் நன்கு வளர்ச்சியுற்றிருந்தன என்பது இந்திய மருத்துவத்தின் தந்தையாகக் கருதப்படும் சுசுருதர் இயற்றிய சுசுருத சம்கிதையில் வரும் அறுவை மருத்துவ முறைகள் மற்றும் அறுவை மருத்துவத்தில் நோயாளிக்கு அளிக்கப்படும் மயக்கப் பொருள்கள் பற்றிய குறிப்புகள் மூலம் தெரிய வருகின்றது. கட்டிகளை அறுவை செய்து மருத்துவம் அளிக்கும் பழக்கம் பழந்தமிழ் நாட்டில் இருந்துள்ளது என்பதை கம்பரது இராமாணத்தில் யுத்த காண்டத்தில் கும்பகர்ணனது வதைப் படலத்தில் வரும் பாடல் மிகத் தெளிவாக விளங்குகிறது.

இராமனிடம் அடைக்கலம் அடையுமாறு விபீடணன் கும்பகர்ணனுக்குப் பல்வேறு அறிவுரைகள் கூறுகின்றான். அப்போது உடலில் தோன்றிய இரண கட்டியை, அதன் நச்சு நீரானது உடலெங்கும் பரவி, உடலைக் கெடுக்காதவாறு அறுத்து, அதிலுள்ள அசுத்த இரத்தத்தை வெளியேற்றி காரத்தை வைத்துச் சுட்டு ஆற்றுதற்குரிய வேறொரு மருந்தினால் அந்த இரணகட்டியினால் உண்டாகிய துன்பத்தை நீக்குவது போன்று, நம் குலமாகிய உடம்பில் தோன்றி உள்ள இராவணனாகிய இரணகட்டியை அகற்றிக் குலமாகிய உடம்பைக் காக்க வேண்டும் என்று கூறுகின்றான் விபீடணன். இக்கருத்தை,

> **“உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்துஅதன் உதிரம் ஊற்றி**
> **சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்”**[1]

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இப்பாடலில் சீழ்க்கட்டிக்கான அறுவை மருத்துவம், 1. கட்டியை அறுத்தல், 2. கெட்ட இரத்தத்தை வெளியேற்றி – சீழை அகற்றல், 3. கட்டி தோன்றிய பகுதியைச் சுடுதல், 4. மருந்திடல் என்னும் நான்கு நிலைகளில் நடைபெற்றதாகக்

கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த நான்கு நிலைகளில் மருத்துவச் சிகிச்சை முடிந்தும், கட்டி ஆறி வலி அடங்கி விடுகிறது எனச் சீழ்க்கட்டி அறுவை மருத்துவத்தைச் சிறப்பாக விளக்குகிறது பாடல். உடல் முழுவதும் புண் பெற்ற மறவனுடைய உடல் மக்களால் வெட்டப்பட்ட மரம் போலிருந்ததாக ஒரு புலவர் பாராட்டுகின்றார்.

> **“மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி”**[2]

இவ்வடியில் மருந்து மரத்தின் பயனாகக் கொள்வார். அஃது சுமூகப் பொதுச் சொத்தென்ற உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். அம்மரம் பட்டுப் போகுமளவிற்கு அம்மரத்திற்கு ஊறு செய்யலாகாது.

இக்கருத்தை ஒரு சான்றோர் ,

> **“மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்”**

என நற்றினையில் குறித்துள்ளார். மருத்துவன் ஒரு வணிகனல்லன்; அவன் மனித குலத்தொண்டனாவான். எனவே அவன் தன்பாலுள்ள கலையை மறைட்தலாகாது; அங்ஙனம் மறைத்தால் ஒரு கொடிய பாவம் என்பது பண்டைத் தமிழரின் கோட்பாடாகும்.

மருத்துவன் நோயாளியின் விருப்பத்தையறிய வேண்டாது அவனுக்கு எது நல்லது என ஆய்ந்து மருந்தளிக்க வேண்டும். நோயாளி கேட்டதைக் கொடாது மருந்தாய்ந்து கொடுத்த 'அறவோன்'[3] சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்றான். புண்பட்ட வீரர்களுக்கு அக்காலத்தில் மருத்துவர்கள் மருந்துகள் பலவற்றைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். புண்களை ஊசி கொண்டு தைத்தல் வழக்கில் இருந்துள்ளது. சிரல் பெயர்ந்தாற் போல நெடுவள்ளூசி கொண்டு மார்பிலேற்பட்ட புண்ணைத் தைத்தமை பற்றிப் பதிற்றுப்பத்துப் பாடலொன்று குறிப்பதால் அறுவை மருத்துவமும் ஒரளவு வளர்ச்சியுற்றிருந்தமை அறியப்படும்.

**காந்த சிகிச்சை**

பல நூற்றாண்டுகளாகவே காந்தப் புலனின் அசைவுகளும் ஆற்றால்களும் மனித குலத்தை வியப்பில் ஆழ்த்தி வந்துள்ளன. மருத்துவத் துறையில் காந்தத்தின் பயன்பாடு பற்றிய கருத்து முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்தத் துறையை 'காந்த மருத்துவம்' என்பர். கம்பராமாயணத்தில் மீட்சிப் படலத்தில் தசரதன் கூற்றாக வரும்,

> **''அன்று கேகயன் மகள்கொண்ட வரமெனும் அயில்வேல் இன்று காறுஎன் இதயத்தின் இடைநின்று என்னைக் கொன்று நீங்கலது இப்பொழுது அகன்றது உன் குலப்பண் மன்றுல் ஆகமாங் காந்தமா மணியின்று வாங்க''**[4]

என்ற இப்பாடலில், அன்று கேகயன் அரசனது மகளாகிய கைகேயி நிறைவேற்றிக் கொண்ட வரம் கூரிய இரும்பினாலாகிய வேலாயுதமானது இதுவரையிலும் எனது இதயத்தினிடை நின்று எனது உயிரை நீக்கியும் விடாமல் பற்றி துன்பமாயிருந்தது. அஃது இப்பொழுது சிறந்த ஆபரணங்களையும், மன்றல் – எனும் துளவமலர்மாலைகளையும் அணிந்த இராமனின் காந்தம் போன்ற மார்பு தன்னைத் தழுவியதால் நீங்கியது என்ற பொருள் அமைகிறது.

**மருந்து வகைகள்**

யுத்த காண்டத்தில் மருத்துவமலைப்படலத்தில் அனுமனிடம் கூறும் சாம்பவான் கூற்றாக அமையும் பாடலில் நால்வகை மருந்துகளைப் பற்றிய விவரங்கள் தரப்படுகின்றன.

> **''மாண்டாரை உய்விக்கு மருந்தொன்று மெய்வேற வகிர்களாகக்**
> **கண்டாலும் பொருந்து விப்பதொரு மருந்தும் படைக்கலங்கள் கிளர்ப்பதொன்றும்**
> **மீண்டேயும் தம்முருவே அருளுவதோர் மெய்ம்மருந்து முள''**[5]

இறந்தவரைப் பிழைப்பிக்கும் மருந்து ஒன்றும் உடல் வேறுவேறு பிளவாகப் பிளந்திட்டாலும் ஒட்டும்படி செய்யும் ஒரு மருந்தும், தைத்த படைக்கல ஆயுதங்களை வெளிப்படுத்துவது ஒரு மருந்தும், உருவம் குலைந்த போதும் மீண்டும் தமது உருவினையே கொடுக்கும் உண்மையான மருந்து ஒன்றும் உள்ளன. என்று அனுமனிடம் சாம்பவான் கூறும் கூற்று, இதே பொருளுடைய மற்றுமொரு பாடலும் இதே மருத்துமலைப் படலத்தில் வருகின்றது.

> **''சல்லியம் அகற்றுவது ஒன்று சந்துகள் புல்லுறாப் பொருந்துவது ஒன்று**
> **போயின நல்லுயிர் நல்குவது ஒன்று நன்னிறம் தொலைய ஆக்குவது ஒன்று**
> **தொல்லையோய்''**[6]

உடலில் தைத்த படை ஆயுதங்களைப் போக்குவது; மூட்டுவாய்களை ஒன்றுபடுமாறு இயைப்பது; பிரிந்து போன சிறந்த பிராணனை மீட்டுத் தருவது; முன்னிருந்தபடியே நல்நிற உடலை ஆக்குவது என்பது பாடலின் பொருளாகும். இப்பாடலுக்கு ஏற்ற மருந்து முறையே, சல்யகரணி, சந்தான கரணி, சஞ்சீவகரணி, சாவல்லியகரணி போன்றவையாகும். இந் நால்வகை மருந்துகளும் அக்காலத்தில் மூலிகைகளாகக் கருதப்பட்டன.

இறந்த உயிரை மீட்பதாகக் கூறப்படும் மருந்து மிருத சஞ்சீவி(னி) எனப்படும்.

"**வீயும் உயிர் மீளும் மருந்தும் எனல்**"[7] என்று சுந்தரகாண்டம் உருக்காட்டுப் படலத்தில் வரும் குறிப்பொன்று, அழியும் நிலையில் இருந்த உயிர் மீண்டும் பிழைத்தற்குக் காரணமாக அமைந்த மருந்து பற்றிக் குறிக்கின்றது.

மந்திரம் மூலம் பாம்புக் கடியின் விஷம் போக்க மருத்துவ சிகிச்சை இருந்துள்ளது என்பது சுந்தரகாண்டம் உருக்காட்டுப் படலத்தில் வரும்.

"**வெள்ளெயிற்று அரவின் வெள் விடத்தை**
**மாய்க்கும் மா நெடு மந்திரம்**"[8]

எனும் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இறந்தவர் உடலைக் கெடாமல் இருப்பதற்கு தைலங்கொண்டு பாதுகாத்தனர் என்பதும் அம்முறைக்கு 'தைலத் தோணியிடல்' என்று பெயர் என்பதும் அயோத்திக் காண்டம், 'தைலமாட்டுப் படலம்' என்ற படலத்தில் வரும் பாடலடிகள் உணர்த்தும்.

"**மையற் கொடியான் மகனீண்டு வந்தான் முடித்து**
**மற்றென்னத் தையற் கடலிற் கிடந்தானைத் தயிலக் கடலின்**
**தலையுய்த்தார்**"[9]

இதே போன்று, யுத்த காண்டத்தில் இராவணன் சோகப்படலத்தில்

இராவணன் கூறுபோது,

"**தொன்னெறித் தயிலத் தோணி வளர்த்துமி னென்னச்**
**சொன்னான்**"[10]

இந்திரஜித்தின் உடலைப் பழமையான முறைப்படியே எண்ணெய்த் தோணியிலிடுங்கள் என்று கூறுவதாக அமைகிறது.

**முடிவுரை**

மேற்கூறப்பட்ட மருத்துவக் குறிப்புகள் கம்பர் காலத்தில் மக்கள் அறிந்திருந்த, நடைமுறையில் செயல் படுத்தப்பட்டு வந்த மருத்துவமுறையாகும். இவைக் இக் காலத்திற்கும் பொருந்துவதாக அமைந்திருப்பதை காணலாம். சங்க காலத்தில் கூட இம்முறை இருந்திருக்கிறது என்பதை கலித்தொகை, நற்றினை, புறநானூறு போன்ற சங்க நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. கம்பராமாயணம் – பாடல். 146.
2. புறநானூறு – பாடல். 180.
3. நற்றினை – பாடல். 136.
4. கம்பராமாயணம் – பாடல். 4010.
5. மேலதே, பாடல். 2664.
6. மேலதே. பாடல். 2727.
7. கம்பராமாயணம் – பாடல். 558.
8. மேலதே.பாடல். 3762.
9. மேலதே. பாடல். 576.
10. கம்பராமாயணம் – பாடல். 3180.